# ௯ மாட்டு வண்டியிலே...

இளமதியும் மணவாளனும் தங்களது தாத்தாவுடன் வார விடுமுறைக்கு அத்தை வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டனர். சலங்கை கட்டிய மாடுகளை வண்டியில் பூட்டினார் தாத்தா. வண்டியின் மீது வைக்கோலைப் பரப்பி மேலே வெள்ளை வேட்டியினை விரித்தார். துள்ளிக் குதித்தபடி ஏறி அமர்ந்தனர் இருபிள்ளைகளும்.

'ஜல் ஜல்' எனச் சத்தமிட்டவாறு வண்டி கிராமத்துச் சாலையில் ஓடத் தொடங்கியது. சாலையின் இருமருங்கிலும் பசுமை போர்த்திய வயல்வெளிகள். தாத்தா மாடுகளை விரட்டியபடி இனிமையாகப் பாடத் தொடங்கினார்.

கழுத்துமணி தாளம் போட
சக்கரமும் சுழன்றோட
உச்சி மண்டையிலே
வெயில் காயுமுன்னே
குண்டு குழிபார்த்து
ஊர் போய்ச் சேர வேணும்
ஊர் போய்ச் சேர வேணும்
வா வா என் செல்லக்கண்ணு..........



புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுதல்

பாடினது போதும். ஏதாவது கதை சொல்லுங்க தாத்தா என்றனர் பிள்ளைகள். சொல்லிட்டாப் போச்சி, கதையென்ன புதிர் போடறேனே. சொல்லுங்க பார்க்கலாம்

தாத்தா: மூன்றாம் எழுத்து உடலின் உறுப்பு, முதலும் மூன்றும் நட்புக்கு எதிரி, ஒன்றும் இரண்டும் நிறைய தரும், மூன்றும் சேர்ந்தால் உட்கார உதவும் அது என்ன?

இளமதி: ம்.......... சிந்தித்துவிட்டு, 'தெரியலை' தாத்தா

தாத்தா: நல்லா சிந்தித்துச் சொல்லுங்க

ஓரெழுத்து உறுப்பு எது? இளமதி நீ சொல்லு

இளமதி: 'கை' தாத்தா

தாத்தா: கொஞ்சமாயிருந்தா சில ன்னு சொல்லுவோம் நிறைய இருந்தா என்ன சொல்லுவோம்?

இளமதி: 'பல' தாத்தா ஆங்..........

மணவாளன்: எனக்குப் பதில் கிடைச்சிருச்சி.......... 'பலகை' – இது சரியா தாத்தா ..........

தாத்தா: நல்லது மிகச்சரியான பதில், இப்ப இளமதியைக் கேட்கிறேன்..........

ஆறையும் ஐந்தையும் கூட்டினால் பணம் வராது........

ஆனா பழம் வரும் அது என்ன?





| | |
|---|---|
| இளமதி: | சற்றுச் சிந்தித்து .......... ஆங் ........... கண்டுபிடிச்சிட்டேன் ........... ஆரஞ்சுப்பழம் தானே ............ |
| தாத்தா: | சரியா சொல்லிட்டியே, செல்லக்குட்டி |
| மணவாளன்: | சரி தாத்தா .......... இப்ப நாங்க கேட்கிறோம் ..... நீங்க சொல்லுங்க, பிறக்கும்போது நிறமும் சுவையும் இல்லாத சுந்தரன், ஊருக்கு ஊர் நிறம் மாறிச் சுவை மாறுவான் அவன் யார்? |
| தாத்தா | அட, எனக்கு விடை தெரியுமே.......... |
| இளமதி: | தாத்தா பதிலைச் சொல்லுங்க. சீக்கிரம்......... |
| தாத்தா | ம் ம் ம் .... எல்லாரோட தாகத்தையும் தீர்க்கும் தண்ணீர் தானே... |
| மணவாளன்: | ஆமா! ஆமா! சரியா சொல்லிட்டிங்களே! |
| இளமதி: | தாத்தா, அத்தை வீடு வந்துவிட்டது. |
| தாத்தா | சரி, சற்றுப் பொறுங்கள் வண்டியை ஓரமாக நிறுத்துகிறேன். |
| | அனைவரும் வண்டியைவிட்டு இறங்கி, ஆவலுடன் வீட்டை நோக்கிச் சென்றனர். |



## வாங்க பேசலாம்

மாட்டு வண்டியில் அல்லது வேறு ஏதேனும் வாகனத்தில் வெளியூர் சென்றிருக்கிறாயா? அப்படி நீ சென்று வந்த அனுபவம் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தண்ணீர் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) தண் + ணீர் (ஆ) தண் + நீர்

(இ) தண்மை + நீர் (ஈ) தன் + நீர்

2. மேலே இச்சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) உயரே (ஆ) நடுவே

(இ) கீழே (ஈ) உச்சியிலே

3. வயல் + வெளிகள் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................................

(அ) வயல்வெளிகள் (ஆ) வயவெளிகள்

(இ) வயற்வெளிகள் (ஈ) வயல்வளிகள்

4. கதை + என்ன இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................................

(அ) கதைஎன்ன (ஆ) கதையன்ன

(இ) கதையென்ன (ஈ) கதயென்ன

5. வெயில் இச்சொல்லின் எதிர்ச் சொல் ........................................

(அ) நிழல் (ஆ) பகல்

(இ) வெப்பம் (ஈ) இருள்

## இணைக்கலாமா?

| | |
|---|---|
| அச்சாணி | பச்சை நிறம். |
| பசுமை | நெற்பயிரின் உலர்ந்த தாள் |
| வைக்கோல் | வண்டிச்சக்கரம் உருண்டு செல்ல உதவும் ஆணி |

## சொல் கோபுரம் அமைப்போம்


இதனைக் 'கரம்' என்றும் கூறலாம் [1]

பசு கொடுக்கும் பானம் [2]

ஆறுகள் சென்று சேருமிடம் [3]

வண்டியில் சக்கரம் கழன்று விழாமல் பாதுகாப்பது [4]

பாலைவனக்கப்பல் [5]



## புதிருக்குப் பொருத்தமான படங்களை மரத்திலிருந்து பறிக்கலாமா!



1. எட்டுக் கைகள் விரிந்தால் ஒற்றைக்கால் தெரியும் அது என்ன? ...........................................
2. அடிமலர்ந்து, நுனி மலராத பூ என்ன பூ? ...........................................
3. கையிலே அடங்கும் பிள்ளை, கதை நூறு சொல்லும் பிள்ளை அது என்ன? ...........................................
4. அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன? ...........................................
5. என்னோடு இருக்கும் சிறுமணி, எனக்குத் தெரியாது ஆனால் உனக்குத் தெரியும் அது என்ன? ...........................................
6. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது. அது என்ன? ...........................................
7. அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு அது என்ன? ...........................................
8. ஒளி கொடுக்கும் விளக்கல்ல, வெப்பம் தரும் நெருப்பல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல அது என்ன? ...........................................

# மொழியோடு விளையாடு

புதிர்களையும் விடைகளையும் எழுதிய அட்டைகளை வகுப்பறையின் நடுவில் வைக்க வேண்டும். மாணவர்களை அழைத்து ஒவ்வொரு மாணவனையும் ஓர் அட்டையை எடுக்கச் சொல்ல வேண்டும். புதிர் அட்டையை வைத்திருக்கும்



மாணவனோடு அப்புதிருக்கான விடையை வைத்திருக்கும் மாணவன் இணைந்து நிற்க வேண்டும். அவர்கள் இருவரும் அதற்கான விளக்கத்தை அளிக்கவேண்டும். இருவரும் இச்செயலைச் செய்து முடிக்கும் கால அளவை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த இருவர் இவ்விளையாட்டை விளையாடுவர். எவர் இருவர் குறைவான கால அளவில் இணை சேர்ந்தனரோ அவர்களே வெற்றி பெற்றவராவர். அனைத்து மாணவர்களையும் விளையாட்டில் பங்கு பெறச்செய்ய வேண்டும்.



**செயல் திட்டம்**

வீட்டில் உள்ள தாத்தா பாட்டியிடம் மூன்று புதிர்களைக் கேட்டறிந்து குறிப்பேட்டில் எழுதி வருக.

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் | – | அறிவில் சிறந்தவர் |
| 2. | ஆன்றோர் | – | பெரியோர் |
| 3. | இரவாது | – | பிறரிடம் கேட்டுப் பெறாது |
| 4. | ஈதல் | – | கொடுத்தல் |
| 5. | உரைத்தல் | – | சொல்லுதல் |
| 6. | ஒலி | – | சத்தம் |
| 7. | ஒளி | – | வெளிச்சம் |
| 8. | கதிரவன் | – | சூரியன் |
| 9. | களிப்பு | | மகிழ்ச்சி |
| 10. | காலை | – | சூரியன் உதிக்கும் நேரம் |
| 11. | காளை | – | எருது |
| 12. | கூட்டம் | – | கும்பல் |
| 13. | சேகரித்தல் | – | ஒன்று திரட்டுதல் |
| 14. | சேர்த்தல் | – | இணைத்தல் |
| 15. | தகுதி | – | தரம் |
| 16. | தெளிவாக | – | விளக்கமாக |
| 17. | நித்திலம் | – | முத்து |
| 18. | நூல் | – | புத்தகம் |
| 19. | நேர்மை | – | உண்மை |
| 20. | பகைவர்கள் | – | எதிரிகள் |
| 21. | பணி | – | வேலை |
| 22. | பல்லி | – | ஒரு சிறிய உயிரி |
| 23. | பள்ளி | – | கல்வி கற்கும் இடம் |
| 24. | மிக்காரை | – | உயர்ந்தோரை |
| 25. | முயற்சி | – | ஊக்கம் |

# கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br>• தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br>• வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | • அறிந்த, கேட்ட கதைகள், தகவல்களைக் கலவைத் தொடரில் பேசுவர்.<br>• கேட்டுணர்ந்த கதை, கதைப் பாடல்களின் தலைப்புகள், கதை மாந்தர்கள்பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துவர்.<br>• கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர்.<br>• பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர். | • தெளிவான ஒலிப்புடன் குறில்–நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர்.<br>• முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக் குறியீடுகளை அறிந்து படிப்பர்.<br>• மூன்று(அ)நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப் பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்துகொள்ள முயல்வர். | • உரிய வடிவத்தில், முறையான இடைவெளியிட்டு எழுதுவர்.<br>• செய்தி/ உரைப்பகுதி/ கதை/இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து, கருத்து தெரிவித்தல், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர்<br>• புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர் |

| நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல்) | சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும் |
|---|---|---|
| வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை அறிவர். (பெட்டிச்செய்தி)<br>ஒருமை, பன்மை வேறுபாடு அறிவர். ( அது – அவை) | படக்கதைகளைத் தேடிப் படிப்பர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள் |
| **படைப்புத் திறன்கள்** | **விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்** | **வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல்** |
| சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர். | • தூய்மை பேணுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• நட்புணர்வு<br>• சேமிப்பு உணர்வு | • தன்னை அறியும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் |

## தமிழ் – மூன்றாம் வகுப்பு

### கல்வி ஆலோசகர்

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### மேலாய்வாளர்கள்

**ஆ.சே.பத்மாவதி**, எழுத்தாளர்,
சென்னை.

**முனைவர். அ. மணமலர்ச்செல்வி**
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம்.

**ந. இராமலிங்கம்**, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**பா. மலர்விழி**, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

**சி. பன்னீர்செல்வம்,**
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

**இல. சீனிவாசன்**, முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலூம் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்

### ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். கா.சா. மொழியரசி,** முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**தே.விமலா தேவி**, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

### கலை மற்றும் வடிவமைப்புக்குழு

### பக்க வடிவமைப்பு

**உதய் இன்போடெக்**
குரோம்பேட்டை, சென்னை

சந்தோஷ்குமார் சக்திவேல்
திருவாரூர்.

### தரக்கட்டுப்பாடு

**ராஜேஷ் தங்கப்பன்**
**காமாட்சிபாலன் ஆறுமுகம்**
**பிரசாந்த் பெருமாள்சாமி**
**ப. அருண் காமராஜ்**

### பாடநூல் உருவாக்கக் குழு

**அ. மேரி வேளாங்கண்ணி**, தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
திம்மனந்தல், விழுப்புரம் மாவட்டம்.

**பெ. முருகராணி,**
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
மருவத்தூர், பெரம்பலூர் மாவட்டம்.

**அர. அனுசுயா தேவி**, இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
சாலையம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

**சு. அமுதா,**
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கீழையூர்,
அரியலூர் மாவட்டம்.

**அ. குளோரி ரூபி மெர்ஸி,**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
மேலரசூர், திருச்சி மாவட்டம்.

**அ. ஜான்ஸிராணி,**
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
ஆமரசூர், திருச்சி மாவட்டம்.

**செ. ஜெயராமன்,**
பாரதியார் நினைவு ந.தொ.பள்ளி,
திருவானைக்காவல், திருச்சி மாவட்டம்.

**ஆ. மேரிமாலா,**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
இராசாம்பாளையம், திருச்சி மாவட்டம்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,** ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

**ஆ. தேவி ஜெஸிந்தா**, பட்டதாரிஆசிரியர்,
அரசினர் உயர் நிலைப்பள்ளி,
என்.எம்.கோவில், வேலூர்.

**மு. சரவணன்** , பட்டதாரிஆசிரியர்,
அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி,
வாழப்பாடி, சேலம்.

### வரைபடம்

**இரா. வேல்முருகன்**
**பா. பிரமோத்**
**கா. தனஸ் தீபக் ராஜன்**
**கா. நலன் நான்சி ராஜன்**
**பா. ரவிகுமார்**
**செ. ரமேஷ்**

### வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

ரமேஷ் முனிசாமி